ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2475/34 - 2026 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2026.02.13
*2475/34 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமாகாண மாகாண சபை

வடமாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

1. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாமான) 184 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை.

2. வடமாகாணத்தின் ஆளுநரான நாகலிங்கம் வேதநாயகன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயமான) 184 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயமான) 184 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு அமைவாக கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள்/ குற்றச்சாட்டுகள் தொடர்பாக சாவகச்சேரி நகர சபையின் செயற்பாடுகளை ஆராய்ந்து, பரிசோதித்து, விசாரணை செய்து மூன்று மாதத்துக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவின் (1A) ஆம் உப பிரிவிற்கமைவாக தனிநபர் விசாரணை சபை ஒன்றிற்காக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்ற நீதவான் திரு. கந்தையா அரியநாயகம் அவர்களை நியமித்துள்ளேன்.

3. விசாரணை செய்யப்பட வேண்டிய விடயங்கள்/ குற்றச்சாட்டுகள்.

    i. நகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் மற்றும் நகர சபை அதிகார சபையின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இல. 2235/54 - 2021.07.08 இல் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின்

1A - PG 7524 — 04 (2026/02)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஏற்பாடுகளுக்கமைய நிர்வாக எல்லைக்குள் அமைக்கப்படுகின்ற கட்டட அமைப்புகள் மற்றும் ஆதனங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் உரிய அனுமதிகள் பெறப்படல் வேண்டும் எனவும் குறித்தவொரு அபிவிருத்தியானது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மற்றும் அபிவிருத்தி அனுமதி பத்திரத்திற்கு இணங்குவதை உறுதிப்படுத்தி தொடர்புடைய அதிகார சபையிலிருந்து அமைவுச் சான்றிதழ் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தி வணிக நிறுவனங்கள் , சிற்றுண்டிச்சாலை, தேநீர் கடைகள், கோப்பிக்கடைகள் மற்றும் அதனை ஒத்த கட்டடங்கள், ஹோட்டல்கள், விடுதிகள், பொதுநோக்கு மண்டபங்கள், தொழிற்சாலைகளுக்கு வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்குமாறும் வியாபார வரி அறவிடுமாறும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் 2025.11.05 ஆந் திகதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை 2026.01.20 ஆந் திகதியில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் உப தவிசாளர் உதாசீனம் செய்தமையும் விமர்சித்தமையும் அங்கீகரிக்கப்பட்டதும் குறித்த நகர சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான சபைக் கூட்ட அலுவல்கள் கொண்டு நடாத்துதல் தொடர்பான நியமத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படாமை.

**நாகலிங்கம் வேதநாயகன்,**
வட மாகாண ஆளுநர்.

ஆளுநர் செயலகம்,
பழைய பூங்கா,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,
2026, பெப்புருவரி 02.

EOG 02 - 0108

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.